[28th December 1956

SRI N. ANNAMALAI PILLAI : தாழ்த்தப்பட்டவர்களில் மிகமிகத் தாழ்ந்த நிலையில் கேள்வி கேட்பாரற்று இருளர்களும், நரிக்குறவர்களும் இருக்கிறார்கள். அவர்களின் நலனுக்காக நமது அரசாங்கம் பணம் ஒதுக்க ஏற்பாடு செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI B. PARAMESWARAN : வட ஆர்க்காடு ஜில்லாவிலே ஒரு பகுதியிலே இருளர்களும், நரிக்குறவர்களும் கொஞ்சம் பேர் இருக்கிறார்கள். இரண்டு வருஷங்களுக்குமுன் ஸ்ரீ அண்ணாமலை பிள்ளை அவர்கள் கேட்ட கேள்வியின் காரணமாக அவர்களுக்கு வேண்டிய நன்மையை செய்வதற்கு ஒரு ஸ்கீம் போடப்பட்டது. மத்திய அரசாங்கத் திடமிருந்து இதற்கு உத்திரவு வந்தால் ஸ்ரீ அண்ணாமலை பிள்ளை அவர்கள் தலைமையிலேயே இந்த ஸ்கீமை ஆரம்பித்துவைக்கத் திட்டமிட்டிருக்கிறோம்.

SRI N. ANNAMALAI PILLAI : நரிக்குறவர்களில் இந்த வருஷத்தி லேயும், சென்ற வருஷத்திலேயும் சட்டசபை ஓட்டர்கள் ஜாப்தாவில் எவ்வளவு பேர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI B. PARAMESWARAN : அவர்கள் ஒரு இடத்திலே தங்கி இருப்பவர்களாக இல்லை. அவர்கள் ஸ்திரமாக ஓரிடத்திலே இருந்தால் அவர்களை சட்டசபை ஓட்டர்கள் ஜாப்தாவில் சேர்க்க முடியும்.

Dearness allowance to Non-Gazetted Officers

* 136 *Q.*—SRI V. V. RAMASWAMI (on behalf of Dr. T. V. Sivanandam) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that the increase in dearness allowance recently sanctioned in the case of Non-Gazetted Officers is not applicable to nurses working in Government hospitals and dispensaries; and

(*b*) if so, the reasons therefor?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) No, Sir. The recent increase in the dearnes allowance is applicable to nurses employed in the Government hospitals and dispensaries also.

(*b*) Does not arise.

Crossword Puzzles

* 137 *Q.*—DR. A. SREENIVASAN : Will the Hon. the Minister for Finance and Education be pleased to state with reference to Legislative Council Starred Question No. 550 answered on 1st March 1956—

(*a*) whether the Government have since received the judgment of the Fourth Presidency Magistrate, Madras, acquitting the proprietor of a crossword puzzles of a charge under section 420, Indian Penal Code; and

(*b*) if so, what action the Government have taken on the matter?

28th December 1956]

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*) An appeal against the acquittal of the accused has been filed in the High Court, Madras.

MR. CHAIRMAN : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ANNOUNCEMENTS RY THE HON. CHAIRMAN

(1) MESSAGE FROM THE GOVERNOR.

MR. CHAIRMAN : I have to announce to the House that I have received the following message, dated the 20th December 1956, from the Governor of Madras :—

" In pursuance of Article 207, clause (3) of the Constitution of India, I, A. J. John, Governor of Madras, hereby recommend to the Madras Legislative Council the consideration of the Madras Official Language Bill, 1956, as passed by the Madras Legislative Assembly."

(2) MESSAGE FROM THE ASSEMBLY.

MR. CHAIRMAN : I have also to announce to the House that I have received the following message from the Deputy Speaker, Madras Legislative Assembly, dated the 27th December 1956 :—

" In accordance with rule 114 of the Madras Assembly Rules, I transmit a copy of the Madras Official Language Bill, 1956 (L.A. Bill No. 46 of 1956), as passed by the Assembly on the 27th December 1956 and signed by me, for the concurrence of the Council."

III.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS OFFICIAL LANGUAGE BILL, 1956 (L.A. BILL NO. 46 OF 1956).

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் தலைவர் அவர்களே, I move—

"That the Madras Official Language Bill, 1956 [a] (L.A. Bill No. 46 of 1956), as passed by the Legislative Assembly, be taken into consideration."

இந்த மசோதாவை இந்த சபைமுன் வெகு மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கிறேன். இந்த மசோதாவை இந்த சபைமுன் கொண்டுவரக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பற்றியே நாம் எல்லோரும் மகிழ்ச்சி அடையவேண்டும். தமிழ் மொழி நம்முடைய தாய் மொழியாகவும், நாட்டு மொழியாகவும் இருந்தாலும்கூட. ஒரு காலத்திலே ஆட்சி மொழியாக இருந்திருந்தாலும்கூட, மத்திய காலத்திலே ஏற்பட்ட அடிமை வாழ்வின் காரணமாக அந்த மொழிக்கும் ஒரு அடிமை வாழ்வு ஏற்பட்டு விட்டது. அரசியாக வீற்றிருப்பதற்குப் பதிலாக பணிப்பெண்ணாக இருந்து பணியாற்றிவரக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. மறுபடியும் அந்த அரசு

---

[a] Printed as Appendix III on pages 434 and 435 infra.